தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் 1971-72 முதல் 1976-77 வரையிலான ஆண்டு கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கை மீதான பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தி இரண்டாவது அறிக்கையையும் நான் பேரவைக்கு அளிக்கின்றேன்.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தொலைக் காட்சியில் வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் (காணொலிச் சுருள் பேழை) திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு 1984.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: ''தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு தொலைக்காட்சியில் வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் (காணொலிச் சுருள் பேழை) திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) பச்சையப்பன் பொறுப்புக் கழகம் (நிருவாகத்தை எடுத்துக் கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1984.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: ''1984 ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழகம் (நிருவாகத்தை எடுத்துக்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, இந்த பச்சையப்பா ட்ரஸ்ட் என்பதிலே 1983-ஆம் ஆண்டு டிசம்பரிலே இருந்து தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டு நிர்வகித்து வருகிறார்கள். அவ்வாறு தனி அதிகாரிகள் நியமிப்பதற்காகச் சொல்லப்பட்ட காரணம் என்னவென்றால் எலெக்ட் ஆன கமிட்டி மெம்பர்களுக்குள் தகராறு என்ற அந்தக் காரணத்தை முன்னிட்டு அதனைக் கலைத்துவிட்டு தனி அதிகாரிகளை நியமித்திருக்கிறீர்கள்.. தகராறு அங்கே மட்டும்தான் வருகின்றதா? இங்கே சட்டச்சபையிலே கூடத்தான் வருகின்றது. அதற்காகச் சட்டசபையைக் கலைத்து விடமுடியுமா? எனவே தகராறு ஒன்றையே காரணம் காட்டி எலக்டட் பாடியினைக் கலைத்தது சரியல்ல. இப்போது மூன்றாண்டு காலமாக அது தனி

அதிகாரிகளின் நிர்வாகத்தில் இருந்து வருகின்றது. ஆனால் இப்போதாவது அது நன்றாக இருக்கின்றதா? அங்கே என்ன நடக்கின்றது? 18 ரூபாய் வாடகையைக் கொடுத்துவிட்டு 500 ரூபாய் மதிப்புள்ள வீட்டிலே குடியிருக்கிறார்கள். 20 இலட்சம் ரூபாய்க்கு செக் கொடுத்தால் அதனை......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதிலே உள்ள விஷயங்கள் அனைத்தையும் இப்போதே பேசிவிட வேண்டும் என்றில்லை. சட்டமுன்வடிவின் ஆய்வுநிலையிலே பேசிக்கொள்ளலாம்.

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, இப்போது அதிகாரிகள் நியமிக்கப்பட்டதற்குப் பிறகும் பெரிய ஊழல் நடக்கின்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தனிப்பட்ட சிலராலே தேர்ந்தெடுக்கப்பட்டு அதன்படி சில பேரைக்கொண்ட ஒரு கமிட்டியாலே நிர்வகிக்கப்பட்டு வந்த ட்ரஸ்ட் இன்றைக்கு சர்க்கார் அதிகாரிகளின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. ஆகவே இவ்வாறு அரசின் கீழ் கொண்டுவரப்பட்ட ஒன்றை தனிப்பட்ட சிலராலே நடத்தப்படுகின்ற நிர்வாகத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து அரசைக் குறை கூற முயற்சி செய்வதை விட ஏதாவது தவறு இருந்தால் எடுத்துச்சொல்லலாம். அவ்வாறு நிர்வாகத்திலே தவறுகள் இருந்தால் அதுபற்றிக் குறிப்பிட்டு அதன்படி தவறுகளைத் திருத்திக் கொள்கின்ற வகையில் முயற்சி செய்வதுதான் சரியானகொள்கையாகும். அரசே அதனை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற கோரிக்கையினை ஆசிரியர்கள் சங்கங்கள் நிறைவேற்றி அதற்காக அவர்கள் பேசிக்கொண்டு வருகின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் அதனை அரசின் கட்டுப்பாட்டிலிருந்து எடுத்துவிட்டு சிலரிடத்திலே தரவேண்டும் என்பதுபோல் பேசுவது இதற்கு முன்னாலே நடைபெற்ற ஊழலைத் திரும்ப நடத்துவதற்குரிய முயற்சியினை எடுக்கிறார்களோ என்ற சந்தேகத்தை எங்களுக்கு ஏற்படுத்துகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, எந்த பர்ப்பஸுக்காக அங்கே இவ்வாறு செய்யப்பட்டதோ அந்தக் காரியத்தையே இவர்களும் செய்கிறார்கள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுபற்றி எல்லாம் ஆய்விலே பேசிக்கொள்ளுங்கள். இப்போது வேண்டாம்.

பேரவை முன்னுள்ள கேள்வி—''1984 ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழகம் (நிருவாகத்தை எடுத்துக்கொள்ளுதல்) திருத்தச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கின்றது.

(இ) பயணிப் பேருந்துகள். ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப் படுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு 1984

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பயணிப் பேருந்துகள், ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்தல்) திருத்தச் சட்டமுன் வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, இச்சட்டமுன் வடிவை நான் அறிமுக நிலையிலே எதிர்க்கிறேன். இச்சட்டம் பேருந்துகளைத் தேசிய மயமாக்குகின்ற கொள்கைக்கு விரோத மானது. இதுபற்றி அரசியல் அமைப்பு பிரிவு 39 பி. அன்ட் சி. க்ளியராகச் சொல்கின்றது.

Ar icle 39 of the Constitution :

"39. Certain principles of polcy to be followed b the State'. The State shall, in particular, direct its policy towards securing---

.. ..

(b) that the ownership and control of the material resources of the community are so distributed as best to subserve the common good;

(c) that the operation of the economic system does not result in the concentration of wealth and means of production to the common detriment".

ஆகவே இது பொது நோக்கத்தையே அழிக்கின்றது. எக்ஸம்ஷன் கொடுக்கின்றது. அதாவது 5 பஸ் வைத்துக்கொள்ள லாம் என்று சொல்வது தேசியமயக் கொள்கை அல்ல. 1973-ஆம் ஆண்டு கலைஞர் கருணாநிதி அவர்கள் அறிவித்த கொள்கை இதுவல்ல. ஊட்டியிலே உள்ள பேருந்துகளை 1973-லே தேசிய மயமாக்கினார்கள். படிப்படியாக பல மாவட்டங்களிலும் ஏற் படுத்தப்படும் என்ற வகையிலே செய்யப்பட்டது. ஆனால் இப்போது எக்ஸம்ஷன் கொடுப்பது என்பதிலேதான் பல தவறுகளும், முறைகேடுகளும் நடப்பதற்கு ஏதுவாக இருக் கின்றது......

TRUTH ALONE TRIUMPHS